www.padippakam.com

மாணிக்கங்களை
இழந்து போகிறேன்

வள நதிகளை
விட்டுச்செல்கிறேன்

படிப்பகம்

www.padippakam.com

# அம்மா

நான் முதன் முதலாகப் போகும் போது
உண்மையாக அழுதும்
திரும்பித் திரும்பி உன்னிடத்தில் வரும் போது
உண்மையாகவே கவலைப் பட்டும்
ஒவ்வொரு முறையும் போகும் போது அழுதும் இங்கு
வந்து சேர்ந்தபின் சந்தோசப்பட்டும்
விரட்டிய அம்மா!

எல்லோருடைய சந்தோசக் கனவுகளும்
தகர்க்கப்பட்டு
அடையாளமில்லாது அழிக்கப்பட்டது

எப்படியும் கட்டாயம் திரும்பி வருவேன்
என நினைத்தது நினைவிருக்கிறது
அது எவ்வளவு காலமென
சரியாக நிச்சயிக்க இயலாத
ஆனால் சந்தோசத்தோடு
திரும்பி வருவேன் என நினைத்தது
நினைந்து வருந்துவது கொடுமை
உலகம் அழிக!

சுகன்

(தாயகம் , 02.07.1993)

# இந்தப் பிறவியில் நான் வரப்போவதில்லை

கொஞ்சம் கொஞ்சமாக
நினைவுகள் மறந்து போகிறதா
அம்மா உங்களுக்கு!

கண் கலங்கி திருநீறிட்டு
வழியனுப்பிய ஒரு காலைப் பயணத்தின் பின்
என்றைக்குமாய்
நான் அன்று வாழ்ந்து
மறு நாள் இறந்தேன் தாயே!

நீ எங்கே இருந்தாலும் கொள்ளிவைக்க வந்திடென
இறுதியிலும் இறுதியாய்ச் சொன்னீர்களே!

கைகளை முன்னுக்குக் கட்டி
பின் புறமாக ஓடவிட்ட
மைதான விளையாட்டில்
நாங்கள் எல்லோருமாய் முதலில் வந்தோம்

பாதித் துண்டமாய் வெட்டியேற்றப்பட்ட
மண்ணுணிப் பாம்பின் மீது
மணற் குவியல்கள் நில்லாமல் கொட்டுகிறது
இந்தப் பிறவியில் நான் வரப்போவதில்லை!

சுகன்

27.08.1993

படிப்பகம்

www.padippakam.com

அம்மாவின் நினைவாக

தெல்லிப்பழை -
அம்பனையில்
மகாஜனக் கல்லூரி அருகில்
பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து
லண்டனில்
13.12.2007 இல்
காலமான

# சிவகெங்கை நாகலிங்கம்

நினைவுக்கு அஞ்சலியாக
இந்தமலர்

12.01.2008 அன்று
வெளியிடப்படுகின்றது



**12-07-1926** **13-12-2007**

படிப்பகம்

www.padippakam.com



அம்மா சிவகெங்கை



கணவர் நாகலிங்கம்



தாயார் அன்னப்பிள்ளை

படிப்பகம்

www.padippakam.com

# திருமதி சிவகெங்கை நாகலிங்கம்

தெல்லிப்பழை – அம்பனையில் மகாஜனக் கல்லூரிக்கு அருகில் ஏறத்தாள நூறு ஆண்டுகளுக்கு முன்பாக மாதர் குடும்பத்தில் பிறந்து வாழ்ந்த இலட்சுமி, மாரிமுத்து, அன்னப்பிள்ளை என மூன்று சகோதரிகளில் இளையவரான அன்னப்பிள்ளை (முருகேசு) அவர்களின் ஒரே வாரிசுதான் 1926இல் பிறந்த சிவகெங்கை. தனிப்பிள்ளை என்பதனால் தனது ஒன்றுவிட்ட சகோதரர்களின் (5 அக்காமாரும் 3 அண்ணன்களும் ஒரு தம்பியும்) அன்பிலும் பாசத்திலும் வளந்தார் சிவகெங்கை.

தனது இருபத்திமூன்றாவது வயதில் தெல்லிப்பழை தென்மேற்கைச் சேர்ந்த திரு கந்தப்பிள்ளை நாகலிங்கத்தின் கரம்பிடித்து சிறிகெங்காதரன், சிறிபாலகெங்காதரன், சிறிகெங்காதேவி, சிறிபாலகெங்காதேவி, சிறிசபேசன் என ஐந்து குழந்தைகளின் தாயாரானார். காங்கேசன்துறை-சிமெந்துத் தொழிற்சாலையில் தொழிலாளியாக தனது தொழிலை ஆரம்பித்து அதன் தொழில்நுட்பப்பிரிவில் உயர்ந்த Fitter-in-charge ஆகிய தனது கணவர் திரு நாகலிங்கத்தின் சகல நடவடிக்கைகளிலும் பக்கபலமாக நின்றார். சமசமாஜக் கட்சியின் நடவடிக்கைளில் அக்கறை கொண்டவராக, மாவைக் கந்தனில் அளவுகடந்த பற்றுக்கொண்ட சமய பக்தராக, தொழிலாளிகளின் உரிமைகளில் அக்கறைகொண்ட தொழிற்சங்கவாதியாக விளங்கிய தனது கணவரின் எல்லா நடவடிக்கைகளிலும் உறுதுணையாக நின்றார்.

அரசியலிலும் சமுக அமைப்புக்களிலும் தீவிரமாச் செயற்பட்ட தனது

*Thank you all for coming here today to celebrate the life of my grandma. I really appreciate it,
I'm sure we all remember my grandma and I know that I will never forget her even though she may not be here with us. There will always be a picture of her in my heart, I know that she will be here for me every step of the way supporting me, loving me and cherishing me for all my excellence.
Goodbye Grandma.*

***Ponni Srisbesan***

*Delivered at
the Funeral Service
on 23 December 2007*

படிப்பகம்

மூத்தமகனின் நடவடிக்கைகளுக்கு துணையாக, அவரின் நண்பர்களையும், தோழர்களையும் அரவணைத்து அன்புகாட்டி நின்றார். அரசியல் காரணமாக உயர்கல்வியைக் காரணமாக்கி மூத்த மகன் இங்கிலாந்துக்கு 1975இல் சென்றபோது கண்ணீருடன் வழியனுப்பிவைத்தார். எனினும் தைரியமாக நின்றவரை 1976இல் திடீரென நோய்வாய்ப்பட்டு இயற்கையெய்திய கணவரின் மரணம் நிலைகுலைய வைத்தது. மிகுந்த வைராக்கியத்துடன் தனது ஐந்து பிள்ளைகளின் உயர்விலும் பங்குகொண்டு நிறைவுகொண்டார்.

மகாஜனாவிலும் யாழ்ப்பாண மாவட்டத்திலும் சிறந்த விளையாட்டு வீரனாக விளங்கிய தனது இரண்டாவது மகன் சிறிபாலகெங்காதரன், கலை- இலக்கிய முயற்சிகளிலும் அரசியலிலும் தீவிரமாச் செயற்படுகின்ற தனது கடைசிமகன் சபேசன் சமய – சமூக அக்கறை கொண்ட பெண் குழந்தைகள் சிறிகெங்காதேவி, சிறிபாலகெங்காதேவி ஆகியோரின் உயர்வில் பெருமை கண்டவர். தனது மருமக்களில் அன்புகாட்டி அன்பு பெற்றவர்.ஜனகன் கார்த்திகேயன் ரிஷிகேசன் பொன்னி பரிதி ஆகிய ஐந்து மணியான பேரக்குழந்தைகளின் அரவணைப்பில் சந்தோசம் கண்டவர். அவர்களின் உயர்வுகளிலும் வெற்றிகளிலும் மகிழ்வு கண்டவர்.

மிகச் சாதாரண குடும்பத்தில் பிறந்து தனது கணவராலும் பிள்ளைகளாலும் இலங்கையின் மிகச்சிறந்த அறிவாளிகளை, இலக்கியவாதிகளை, பாராளுமன்ற உறுப்பினர்களை, மந்திரிமார்களை நண்பர்களாக- விருந்தினர்களாக கண்டு மகிழ்ந்தவர். ஆயிரம் பிறைகண்டு முழுமையான, மகிழ்ச்சியான வாழ்வு வாழ்ந்த திருமதி சிவகெங்கை நாகலிங்கம் அவர்கள் 13-12-2007இல் இயற்கை எய்தினார்.

www.padippakam.com

# தாயாகி நின்ற அம்மையார் – சிவகெங்கை

பொ கனகசபாபதி
முன்னாள் அதிபர், மகாஜனக்கல்லூரி

அம்மா என்றழைக்காதவரில்லையே!
சிவகெங்கை அம்மா அவர்களை இம்முறை கட்டாயமாகப் பார்க்க வேண்டும் என இராமநாதனிடம் கூறியிருந்தேன். ஆகவே சுவிஸ்சிலிருந்து இலண்டன் திரும்பியதும் வீடு செல்லாமல் நேராகவே வைத்தியசாலை சென்றோம். கெங்காவும், அவர் பாரியாரும், சகோதரியும் எமக்காகக் காத்திருந்தனர். பார்த்தோம். ஆனால் அவருக்கு என்னை யாரெனவே விளங்கியிருக்க முடியாது. எத்தனை, எத்தனை முறைகள் என்னை முறுவலுடன் நோக்கிய அந்த முகம், அன்று காய்ந்து போய் விடைபெறுவதற்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தது. என்றும் கண்டபோது பவ்வியமாக 'சேர்' என்று அழைத்த அந்த அமுத வாய் அன்று பேச்சு மூச்சின்றி ஓய்ந்து போயிருந்தது. இல்லம் ஏகி வந்த அத்தனை இளைஞர்களையும் அரவணைத்த கைகளும் கால்களும் சோர்ந்து போய்க் கிடந்தன. என் கண்கள் பனித்தன.

எனது மனம் பின்நோக்கிச் சென்றது. பாடசாலையின் அருகே அமைந்த இல்லம். அது எத்தனை பேர்களுக்குத் தஞ்சம் கொடுத்துள்ளது. ஏறக்குறைய பாடசாலைக்குச் சொந்தமான ஒரு விடுதியாகவே அது அமைந்திருந்தது. ஐந்து பிள்ளைகள் அவ்வீட்டிலிருந்து வந்து எமது பாடசாலையில் கற்றார்கள். எல்லோருமே சினேகபாவத்துடன் பழகும் அற்புதமான குணநலன் உடையவர்கள். சிறுமை கண்டு பொங்குபவர்கள், இலக்கிய நாட்டமுடையவர்கள், விளையாட்டுக்களில் அதீத அக்கறை உடையவர்கள். ஆகவே வெவ்வேறு வயது மட்டங்களிலே நண்பர் குழாத்திற்குச் சொல்ல வேண்டுமா? காலை, மாலை, மதியம் என அவர்கள் வீடு மாணவர்களால் நிறைந்திருக்கும். அம்மையாரின் அனுசரணைமிக்க உபசரிப்பு இல்லாவிட்டால் இது சாத்தியமாயிருக்குமா? பிள்ளைகள் ஸ்ரீகெங்காதரன், சபேசன் இலக்கிய ஆர்வலர்களாயிருப்பதுடன் அரசியல் சித்தாந்தத்திலும் சாமானியர்களுக்கு விதிவிலக்கான சிந்தனை, நோக்குக் கொண்டவர்கள். ஆகவே பெரும்பாலான

அன்பாலும்
பண்பாலும் பாசம்
கொண்ட அம்மாவே,

கண்டவுடன் குசலம்
விசாரிக்கும் தாயே
உங்கள் அன்பு
வார்த்தைகளை
இனி எப்படி
எப்போது
கேட்போம்.
உங்கள் ஆத்மா
சாந்தியடைய
இறைவனை
வேண்டுகின்றோம்.

திருமதி தனபதி
பாலசுப்பிரமணியம்
மகாஜனக் கல்லூரி
முன்னாள் ஆசிரியை

திரு பற்றிக்ஸ்
பாலசுப்பிரமணியம்

www.padippakam.com

சமூகத்தின் எதிர்ப்புக் கூட எழுந்திருக்கலாம். ஆனால் எதற்கும் அஞ்சாதவராய், தனது பிள்ளைகளின் அத்தனை செயற்பாடுகளுக்கும் முழுமையான ஆதரவு நல்கியவராய் , ஏன் ஓரளவு ஈடுபாடும் காட்டியவராய் ,பங்காளியாய் நின்றார். பகுத்தறிவு வாதியாய், இலக்கிய நாட்டமுடையவராய், சமூக உயர்வு பேணும் சமதர்மவாதிகளாய், பிள்ளைகள் குரல் கொடுத்த போது அவர்களின் முதன்மை ஆதரவாளராய் காட்சி அளித்தார்.

ஒரு பாடசாலை, அதுவும் கிராமத்துப் பாடசாலை இத்தனை எழுச்சியுடன் ஏறக்குறைய 100 ஆண்டுகள் பிரகாசிக்க முடிந்தது என்றால் அது எப்படி சாத்தியம் ஆயிற்று. அதன் அயலில் இருப்போர் பாடசாலைக்குக் காட்டிய ஆதரவும் ஒரு துணைஅம்சமாக இருந்தது என்றால் மிகையாகாது. நான் சொல்வதின் உண்மையான தாற்பரியத்தை உணர்வது கடினம். இன்னும் விளக்குவதானால் சொந்தமாக ஒரு கிணறு கூட மகாஜனாவுக்கு இல்லை. ஆனால் மாணவர் தொகையோ 1700 வரை. விடுதிச் சாலையிலே 100க்கும் அதிகமானோர். பங்குக் கிணறுகள் இரண்டு மாத்திரம் இருந்தது. அதில் ஒன்றினை பாடசாலை உபயோகித்ததில்லை. மற்றையதுஅம்மையார் வீட்டுடன் பங்கு. பல நாட்கள் கிணற்றில் நீர் வற்றி நீரே இருக்காத நிலை. நீர் இறைக்கும் இயந்திரத்தை தொடக்கி விட்டு விடுதிச் சாலை மாணவர்கள் தம் பாட்டில் போய்விடுவார்கள். நீர் தாங்கி நிரம்பிய பின்னும் இயந்திரம் இயங்கித் தண்ணீர் இறைக்கும். நீர் விரயமாகும் .கிணற்றில் நீர் இருக்கமாட்டாது. வீட்டுப் பாவனைக்கோ நீர் எடுக் முடியாத நிலை. அம்மையார் ஒரு சுடு சொல் கூறவேண்டுமே. யாசிப்பார்கள் எந்திரத்தை நிறுத்துங்கள் என்று. இப்படி எத்தனை எத்தனை நாட்கள் நடந்தன.

சிவகெங்கை அம்மையார் நிறைவான வாழ்க்கை வாழ்தவர்கள். அன்புசால் பிள்ளைகள், அருமை மருமக்கள், வாஞ்சையுடைய பேரன் பேத்திகள் என உறவுகள் சூழ இன்பமயமான வாழ்க்கை வாழ்ந்தவர்கள். தனது மைந்தன் ஸ்ரீகெங்காதரன் இன்று இலண்டன் மாநகரில் பல்லோரதும் அன்பிற்கு ஆளாகி பல்வேறு அமைப்புக்களில் தனது பங்களிப்பைத் தந்து எல்லோரதும் நன்மதிப்பிற்கும் பாராட்டுக்கும் உரியவராய்த் திகழ்வது கண்டு பெருமை கொண்டவர்.

அவரது பிரிவு துயர் தருவதாயினும் அவர் நிறைவான வாழ்க்கை வாழ்ந்துள்ளார் என்பதை எண்ணி எம் துயர் போக்குவோமாக.

அம்மையார் ஆத்மா சாந்தி பெறவேண்டும் என வேண்டும்

அன்பன்
பொ.கனகசபாபதி

படிப்பகம்

எமது கல்லூரியின் பழையமாணவரும், கல்லூரியின் அயலவருமான, ஒருவரின் மறைவு எமக்கு மிகவும் கவலைத் தருகிறது. இவர் எமது கல்லூரிக்கும், அதன் பழைய மாணவர் சங்கத்திற்கும் தொடர்ந்து ஆதரவு வழங்கியது மட்டுமல்லாமல், தனது பிள்ளைகளான முன்னாள் செயலாளர் திரு சிறிகெங்காதரன் (கெங்கா),மாணவனாக விளையாட்டுத்துறையில் சிறந்து விளங்கிய திரு சிறிபாலகெங்காதரன்(ரவி), திருமதி சிறிகெங்கதேவி சிறிதரன்(ரஜனி), திருமதி சிறிபாலகெங்காதேவி ராஜரத்தினம்(பாப்பா), திரு சிறிசபேசன்(சபேசன்) எல்லோரையும் கல்லூரியினதும், பழைய மாணவர் சங்கத்தினதும் நடவடிக்கைகளில் பங்குபற்ற தனது தாராள மனதுடன் அனுமதித்ததை நன்றியுடன் நினைவுகொள்கிறோம்.

அம்மையார் அவர்களின் மறைவால் துயருறும் பிள்ளைகள், குடும்பத்தினர், மற்றும் மகாஜனன்களோடு, நாங்களும் இணைந்து எமது இறுதி வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
ஐக்கிய இராச்சியம் 23-12-2007

அன்புக்கும்
பண்புக்கும்
பாசத்துக்கும்
உதாரணமாக
இருந்த அம்மா
இன்று இல்லை.
ஆனால் அவர்
வீட்டுச்சென்ற
செல்வங்கள்
அவரின் வழியில்
செல்வர் என்பது
உறுதி. உங்கள்
பிரிவால் வாடும்
உங்களின் அருமைச்
செல்வங்களிற்கு
எமது ஆழ்ந்த
அனுதாபங்கள்.

க. ஜெகதீஸ்வரம்பிள்ளை
குடும்பம்
கிங்ஸ்ரன்
தமிழ்ப்பாடசாலைத்
தலைமை ஆசிரியர்

www.padippakam.com



குடும்பத்திற்குப் பெருமை தந்த மகாஜனக் கல்லூரி முன்புறத்தின் அழகான தோற்றம் (2004)



1975இல் கணவரின் காணியில் அமைத்த கிரெம்ளின் இல்லத்தின் முன்பாக குடும்பத்துடன் (1976)



உயர் பாதுகாப்பு வலையத்தினுள் பாழடைந்த கெங்கா பவனத்தின் இன்றைய நிலை (2004)



பெறாமகன் திருமணத்தின் போது தம்பதிகளுடனும் சகோதரங்களுடனும் (1978)

படிப்பகம்

www.padippakam.com

**MESSAGE OF CONDOLENCES**
**FROM MAHAJANA COLLEGE OSA CANADA**

The sad news of death of Genga's mother, Sivakengai, came as a shock to me. I have known her from my childhood. On behalf of Mahajanans Canada, I would like to take this opportunity to express our deepest sympathies and condolences to her family for their great loss. The late Mr. Nagalingam and his wife Sivakengai Nagalingam have won the hearts of Mahajanans by working tirelessly with our college towards fostering sports culture especially in soccer and cricket. Hence, one of Mrs. Sivakengai Nagalingam's numerous contributions will be her lasting legacy in all of our memories as being the mother figure of our sportsmen.

It is hard to find a sportsperson in Mahajana college that she did not help or touch in some way or another. She was respected and admired by everyone from teachers to students. Her untimely departure from us is very to hard to fill. We hope her children are comforted somewhat by the fact that their grief and bereavement is shared also by thousands of Mahjanans around the globe. We salute and reflect on the many happy memories of Mrs. Sivakenkai Nagalingam for her commitment and devotion to Mahajana College's development.

**With Regards,**

**V. Nantheeswarar**
**President**
**Mahajana College OSA Canada.**

தமிழ்ப்பாடசாலைகள்
விளையாட்டுச்
சங்கத்தின்
ஸ்தாபகர்களில்
ஒருவரும் இப்போதய
தலைவருமான
சிறிகெங்காதரன்
அவர்களை
பணிசெய்யவென
இவ்வுலகிற்குப்
படைத்துவிட்டு,
அவரது நீண்டகாலப்
பணிகளை
கண்கூடாகக் கண்டு
மகிழ்ந்து
இவ்வுலகைவிட்டுப்
பிரிந்துபோன
அம்மாவின் பிரிவால்
துயருறும் குடும்ப
உறவுகள்
அனைவருக்கும்
ஆழ்ந்த
அனுதாபங்கள்

மகாலிங்கம் சுதாகரன்
கொம்மாந்துறை
மகாவித்தியாலய
சர்வதேச
ஒருங்கிணைப்பாளர்

படிப்பகம்

www.padippakam.com



குடும்ப நண்பர் தொழில் நீதிமன்ற நீதவான்
திரு மனோ சிறிதரனுடன் (1997)



தோழர் வாசுதேவ நாணயக்காராவுடனும் மனித
உரிமைப் போராளி நிமால்காவுடனும் (2003)



எண்பதாவது பிறந்த தினத்தின் போது சைவத்
தொண்டன் இராமநாதன் - விஜயலக்சுமி தம்பதிகளுடன்



எண்பதாவது பிறந்த தினத்தை ஒட்டிய இசை
நிகழ்ச்சியில் மாவை சேனாதிராஜா MP (2006)

படிப்பகம்

www.padippakam.com

# சபேசனின் அம்மா

எல்லோரையும் போலவே சபேசனுக்கும் ஒரு அம்மா இருந்தார். ஆனால் அவர் எனக்கும் அம்மாவாக இருந்தார். தனது 82வது வயதில் லண்டனில் காலமான சிவகெங்கை அம்மா அவர்களின் செய்தி என்னை ஒருகணம் ஆடச்செய்தது. 82வயது முதுமையின் இயற்கை. ஆனாலும் என் நரம்புகளில் ஒரு வித உணர்வு ஓடிமறைந்தது.

ஆரம்ப பள்ளி நாட்களிலிருந்தே ஆரம்பமான சபேசனுடனான என் பள்ளி நட்பு பரிஸ் லண்டன் பாலமாய் விரிந்து தொடருகிறது. இதில் சபேசனின் அம்மா எனக்கும் அம்மாவாய்போனதும் அவர்கள் குடும்பம் என்குடும்பமாய் போனதும் ஒன்றும் ஆச்சரியமானதல்ல.

மகாஜனாவின் வேலியும் சபேசன்வீட்டுவேலியும் ஒன்றானது மட்டுமல்ல கிணறும் ஒன்றுதான். அவர்களின் வீடு, அவர்களின் மனசைப்போலவே அகன்ற வாசலை உடையது. காலையிலும் மாலையிலும் துவிச்சக்கரவண்டிகளாலும் மாணவ நண்பர்களினாலும் நிறைந்து இருக்கும். அங்கு சபேசனின் அம்மாவின் அன்பு கலந்த உறவு இருக்கும். மனம்திறந்து எதையும் பேசலாம். அத்தோடு அறுசுவை உணவும் இருக்கும். இவைதவிர அறிவுரையும் கண்டிப்பும் கூடவே உண்டு.

சிறுவயதில் ஏழ்மையில் அவதிப்பட்ட எனக்கு அவர் காட்டிய கருணைமுகம் உயர்ந்தது. அவர் அடிக்கடி கூறும் முதுமொழி **பாலகன் பஞ்சம் பத்துமாதம். நம்பிக்கையாயிரு.** இதை வெறுஞ்

*எமக்கு உறவினராக மட்டுமல்ல சமூகப் பிரக்ஞையுள்ள தாயாகவே அமரர் சிவகெங்கை நாகலிங்கம் அவர்களை என்னால் காணமுடிகின்றது. எமது இளமைக்கால வாழ்வில் எம்மை நல்வழி நடத்தியவர்களில் இந்தத் தாயும் ஒருவர். இந்தத் தாயின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் அவரின் பிரிவால் துயருற்று நிற்கும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்*

கந்தையா முருகதாசன்
அம்பனை
கலைப்பெருமன்ற
முன்னாள் செயலாளர்
ஜேர்மனி

www.padippakam.com

சோற்றுப்பருக்கைகளை பிசைந்து தரும்போது எனது அம்மாவும் அடிக்கடி சொல்லுவார். நம்பிக்கையாயிருத்தல் நம்பிக்கையோடிருத்தல் என்பது வாழ்க்கையில் எவ்வளவு முக்கியமான விடயம். சிவகெங்கை அம்மாவின் முதுமொழி இன்றுவரை என்னோடு தொடர்கிறது.

லண்டன் செல்லும் தருணங்களெல்லாம் சபேசன்வீடே என்வீடு. சபேசன் அம்மாவே என் அம்மா. இன்று அம்மாவை இழந்த வேதனையில் நான். *ராதா என்ற கனிவான குரலுக்கு ஏங்குகிறேன்.*

**சி. ராதாகிருஷ்ணன். (பிரான்ஸ்)**
(நன்றி: mahajanan.com )
President of France Mahajana College OSA

It was 1979. It was when Prevention of Terrorism introduced to the Tamils. It was not just law, action came with unleashing terror on the youths of Jaffna. Security forces unleashed terror on the Tamils in Tamil home. We lost our comrades Inpam and TR Bala. Some were found dead. Many were never found. When many wanted to keep away from us, she invited us in and provided us a safe haven. This was Genga's mother.

We gathered at Genga's house! It was a house for all political opinions and activities. All were welcomed. The mother whom we referred as Genga's mother became mother to all of us who went mainly from the UK. The mother had an overwhelming love and care for everyone who frequented their house. Everyone engulfed with the same spirit. This mother has left her spirit behind with many most importantly her children and grand children.

May she rest in peace.

**Charles Antonidas**
**Represented Tamils at Thimbu talks with Sri Lanka**

படிப்பகம்

www.padippakam.com

# மனிதனாக வாழ்தல் கூட இந்த சமூக அமைப்பில் எடுத்துக் காட்டுத்தான்

சுயநலமும், குறுகிய நோக்கமும் கொண்ட இந்த சமூக அமைப்பில், மனிதனாக வாழ்தல் என்பது கூட விதிவிலக்குத் தான். தான் உண்டு, தன் குடும்பம் உண்டு என்ற குறுகிய வட்டத்தில் வாழ்கின்ற மனிதர்களிடையே, விதிவிலக்காக வாழ்ந்த ஒரு தாயின் மரணச் செய்தியை கேட்க நேர்ந்தது.
சாதாரணமாகவே இந்த சமூக அமைப்பில் வாழ்ந்து மடிந்த ஒரு பெண் தான் **நாகலிங்கம் சிவகெங்கை**. சபேசனின் அம்மாவாக அறிமுகமாகி, எமக்கு எல்லாம் அம்மாவாக இருந்த அந்த தாய், தனது முதிர்ந்த வயதில் 13.12.2007 அன்று லண்டனில் மரணமானார்.

நான் இன்று பழைய நினைவுகளை மீட்டுப்பார்க்கின்றேன். அந்த தாயின் அர்ப்பணிப்பை, மனிதம் பற்றிக் கொண்டிருந்த அந்த சமூகப் பண்பை, எந்த சுயநலமுமின்றி எம்முடன் வாழ்ந்த அந்த தாயின் தாய்மைப் பண்பை, மீண்டும் மீண்டும் எண்ணிப் பார்க்கின்றேன்.

எம்மோடு வாழ்ந்த ஒவ்வொரு தோழர்கள் துன்பத்திலும் பங்கு கொண்டவர். ஒவ்வொருவரிலும் மிகுந்த அக்கறை கொண்டவர். தனது உணவைக் கூட எம்முடன் சரி சமனாக பகிர்ந்தவர். நாம் அவரின் உற்றார் உறவினர்கள் அல்ல. யாரென்று தெரியாத எம்மை, அவரின் மகன் மூலம் அறிமுகமானதால் மட்டுமோ, மகனுக்காகவோ எம்மை அனுசரிக்கவில்லை. மகன் நாட்டைவிட்டு வெளியேறிய பின் தான், எமது உறவு கூட மிகப்பலமானதாக மாறியது.

சமுதாயத்தின் விடுதலைக்காக போராடிய பலரை, அரவணைத்தவர். நேரடி யுத்த களத்தில் போராடுபவன் மட்டும் வரலாற்றில் பங்கு பற்றுபவனல்ல, தியாகத்துக்குரியவர்கள் அல்ல. மார்க்சிம் கார்க்கியில் தாய் நாவலில் வரும் தாய் போல், பல தளத்தில் சிலர் (தாய்மார்கள்) போராடுகின்றனர். எந்த சுயநலமும் இன்றி, எந்த குறுகிய நோக்கமுமின்றி இயங்குதல், வாழ்தல் என்பது, இந்த சமூக அமைப்பில் அசாத்தியமானது. இவற்றை மீறி எம்முடன் எம்

*கண்முன்னால் நடந்த அநியாயங்களுக்கும் அதிகார துஷ்பிரயோகங்களுக்கும் எதிர்நிலை எடுத்தவர். தனது நலனுக்காக ஆளும் வர்க்கத்துடனும் அதிகார பீடங்களுடனும் வெகுஜன விரோதிகளுடனும் கூட்டு வைக்காதவர்.*

*சாதாரண மக்களுக்கு ஆதரவாகவும் அன்பாகவும் வாழ்ந்த சிவகெங்கை அம்மாவின் நினைவுக்கள் நீடு நிலைத்திருக்கும்*

*ம அருள்குமாரன்*

படிப்பகம்

நினைவுகளுடன் வாழ்ந்தவர். இந்த மனிதப் பண்பை, போராடுபவர்கள் மத்தியில் கூட காண்பது அரிது. இதைத்தான் இந்த இடத்தில் என்னால் மீள நினைத்துப் பார்க்க முடிகின்றது.

உள்ளத்தில் ஒன்றைவைத்துக் கொண்டு, அவர் மற்றவருக்கு உதவியவரல்ல. கள்ளம் கபடமற்ற இதய சுத்தியுடனான அவரின் மனித உறவுகள், இந்த மரணத்தின் மூலம் எம்மை உலுப்பித் தான் விடுகின்றது. அதைக் கற்றுக் கொள்ளத்தான் கோருகின்றது.

எமக்கு மட்டும் அவர் உதவியவர் அல்ல. அடிக்கடி இராணுவத் தாக்குதலுக்கு உள்ளாகி சுற்றுவட்டாரமே அகதியாகும் போதும், அவர்களின் ஒரு பகுதியினரின் தங்குமிடமாக இவர்கள் வீடு இருந்தது தற்செயலானதல்ல. நான் மண்ணைவிட்டு வெளியேறிய பின், எனது குடும்பம் அகதியாகிய போதும் கூட இந்த தாயிடம் தான் ஓடிவந்தார்கள். அந்தளவுக்கு முகம் சுழியாது, இருப்பதை பகிர்ந்து உண்பது முதல், தமது அன்பால் இன்முகத்தால் அனைவரையும் அரவணைத்தவர். தமது வாழ்வை, அவரின் மூத்த மகளுடன் சேர்ந்து, இப்படித் தான் என்று வாழ்ந்து காட்டியவர்.
இது சாதாரணமானதல்ல. சுயநலம் கொண்ட எமது சமூக சிந்தனை முறையில் இருந்து விடுபட, மனதளவில் இதற்கு நிறையவே தியாகம் செய்யவேண்டும், போராட வேண்டும். இயல்பான இயற்கையான மனிதப் பண்பை வளர்த்துக்கொள்ள வேண்டும். இதற்கு இந்த தாய், இந்த பெண், இந்த மனிதர், இந்த சமூகத்தில் தம்மளவில் எடுத்துக்காட்டாக தான் வாழ்ந்தார். இதற்கு பின்னால் பலருக்கும் இல்லாத மனிதத்தன்மை இருந்தது. மனிதப் பண்பு இருந்தது. மனித உணர்வு இருந்தது. இவை அவர் பற்றிய குறுகிய புகழ்ச்சியல்ல. மாறாக எதார்த்தத்தில் மற்றவர்களுக்கு உதவுவதன் மூலம் வாழ்ந்து காட்டியவர்.

பல உயிர் ஆபத்தான இயக்கப் படுகொலை நிகழ்வுக் காலங்களில் கூட, துணிச்சலுடன் எதிர் கொண்டவர். சில துன்பகரமான நிகழ்வுகள், அவதூறுகளின் பின் கூட, அவர்கள் தம் முந்தைய மனிதப் பண்பை துளியளவும் கூட இழந்தது கிடையாது. அந்த தாய் தன்னலமற்ற வகையில் பலருக்கு உதவியதை, காலத்தால் பலர் மறந்திருக்கலாம். ஆனால் அதை மீட்கின்ற போது, இலகுவாக யாரும் புறந்தள்ளிவிட முடியாது.
சுயநலமே சமூக அமைப்பாகிவிட்ட எல்லைக்குள் இதை எண்ணிப் பார்க்கின்றேன். மனிதனாக வாழ்தல் என்பது எடுத்துக்காட்டுத் தான். இந்த வகையில் இந்த தாய் விதிவிலக்குத் தான். மற்றவர்களுக்கோ இது எடுத்துக் காட்டுத்தான்.

பி.இரயாகரன்
15.12.2007
(நன்றி: tamilcircle.net)

www.padippakam.com

# Tribute from the eldest Grandson

It is very hard to stand up here and speak about a loved one when you're mourning, especially in front of so many people. It's hard enough for me right now, so imagine how much strength and character the young girl you just saw must have in her. The speech that was just read out was written by her, Ponni Sri Sabesan is only nine years old, and is the only direct granddaughter of the late Mrs Sivakengai Nagalingam.

It is the belief, strength and legacy of my Grandmother which has brought us all here today. It is these values that have been sternly instilled into each and every one of us you see before you. From a young age we have been brought up to be strong, committed, selfless, kind, and to be the best that we can be. It is why the young girl you just saw was able to stand up here and bravely say words which can only be found deep in her heart. This is the legacy that my Grandmother started.

I understand that not everyone here today knew my grand mother, but instead maybe here to support the people that they love and respect, namely my aunts, uncles, my cousins, my father and myself. It has dawned on me that such commanding respect for an ordinary person could only have been commanded by my Grandmother. She is the reason why my family are the people they are, and why they are so respected, and why this has been filtered on to my cousins and me. It is this great humanitarian, this great woman who lies in the casket beside me, who started this wonderful family, who gave birth to it, and whose memory will forever be remembered. None-the-less ladies, gentlemen and friends, whichever reason it is that brings you here today, on behalf of my family, and as the eldest Grandchild to Mrs Sivakengai Nagalingam, I thank you all for being present.

Appamma or Kunchiarchie as she was fondly called has had 5 children, 5 direct grandchildren and many others of course and a number of great grandchildren. She

**To Our Dearest Grandma,**

***We all miss you so much. The circle of life is the cruellest aspect at our life that none of us - grandchildren will never understand. We take comfort knowing that you have moved to a better place and that we have an angel to look after us and watch over us.***

***Our hearts have only the fondest of memories of you that we will cherish.***

***Methilan , Akilan & Thulasi Vivekenandarajah***

படிப்பகம்

lived through a World War and a Civil War, and passed away at the grand old age of 81. This alone surely makes her a great treasure to us, but if truth be told, this is just the tip of the ice berg. There is so much more to her that even some of us youngsters may not know.

I met my grandmother for the first time when I was nine years old. I remember being very afraid and scared. After all it was my first time in Sri Lanka, and there was this strange older woman who was kissing my cheeks at every opportunity she got, that's daunting for any child. My lack of understanding and knowledge for Tamil culture, certainly made me feel somewhat of an outcast when I was young. But regardless of my cultural misfits, my Gran loved me very much.

As the years rolled by, she would eventually come to live with us in the UK, the fear I once had of her subsided and of course I began to know the woman who is my Appamma. Without realising, my Grandmother and I began to form a very unique and intimate relationship; it was almost unknown to most. Gran would talk to me about life back home, and how hard it was. She would talk about my Grandfather, and all the naughty things my aunts, uncles and Dad would get up to. She was amazingly detailed with her talks; you could close your eyes and almost imagine yourself there.

It is because of her stories that I have a great appreciation of what life was like for many of you back in Sri Lanka, she made me realise that I shouldn't take life for granted, that really and truly every breath I take, every choice I make, would not have been possible if it were not for her struggle. Women like her are heroes in their own right, not many people, especially those that are of my age, can say they have gone through life facing such fearful challenges. Ladies and gentlemen, I can tell you that being a descendant of someone as well known as my Appamma from the small town of Tellipallai, Jaffna is a great honour. I am incredibly proud of my roots, and my family, who of course would not be who they are, if it were not for the continued love, support and nurture of a fearless, courageous and determined mother.

Appamma always looked out for me, as she did with all her children, she always asked questions about our life, our welfare, our education, our health. Although I wasn't there, my cousin Karthik recalled a memory of when I first started working professionally, fresh out of Uni. My Dad was ecstatic, and of course went straight to his mum to tell her the good news, upon hearing my success, Gran simply asked, "Is he happy" and "does he get paid well",

www.padippakam.com

to which my Dad replied "yes" to both, There are very few things I could have done for my Grandma to raise a smile. You see, she was a very simple woman, who appreciated the little things in life, but when she knew of my accomplishment she took a great sense of pride with her, she was pleased with all that I had achieved, and what the future held for me.

On other occasions when she was really curious, she would ask me up front if I had a girl friend, or if I was planning to get married any time soon. Her only wish was that she could see me getting married one day. It hallows me to know that I could not make her last wish come true during her time on this earth. But one day I hope to make a certain old lady's last wish come true, and I will re-store that sense of pride and happiness in you again Appamma.

Finally ladies and gentlemen, I leave you all to ponder over this quote which was read to me a few days ago;

**"When you are sorrowful**
**look again in your heart,**
**and you shall see that in truth**
**you are weeping for that**
**which has been your delight".**

**Be happy, smile, and be proud of your legacy, for I certainly am, Good night and Sleep Well Appamma.**

**Janagan Srigengatharan**

*Delivered at the Funeral Service on 23 December 2007*

***Genga,***

***Thank you for sending details of the funeral. I did receive the message about your mother's passing away from Charles but without the attachment.***

***I will be attending to pay my respects to your mother for giving us a fine socialist son.***

***Regards***

**M Soorlasegaram**

படிப்பகம்

www.padippakam.com





80th Birthday Celebration on 12 July 2006





படிப்பகம்

www.padippakam.com

## எங்கள் ரவியின் அன்பான அம்மா...

ரவி என்ற சிறிபாலகெங்காதரன் எங்கள் மகாஜனாவின் சிறந்த விளையாட்டு வீரன். நான் அவருடன் பல வருடங்கள் கிரிக்கெட், கொக்கி, உதைபந்தாட்டம் என எல்லா விளையாட்டுக்களிலும் விளையாடியிருக்கின்றேன். நான் , அண்ண ன் நகுலேஸ்வரன், தம்பி டியூக் என நாங்கள் மூன்று பேரும் மகாஜனாவில் படித்து விளையாடியிருக்கின்றோம். எல்லோருமே ரவியுடனும் சகோதரங்களுடனும் நன்றாகவே பழகிய நண்பர்கள்.

அதிலும் மகாஜனா உதைபந்தாட்ட வெற்றிகள் பெற்ற காலங்களை மறக்க முடியுமா. எவ்வளவு கொண்டாட்டங்கள். கொண்டாட்டங்கள் எல்லாத்திற்கும் இவர்கள் வீடு முக்கியமான இடம். எத்தனை இனிய நாட்கள்.

எங்கள் School daysஇல் எத்தனை முறை உங்கள் வீட்டு முற்றத்தில் நின்று பலபேரைச் சந்தித்திருப்போம். எத்தனை பேர் வந்தாலும் உபசரித்து அவர்களது தேவைகளை உணர்ந்து பல உதவிகளைச் செய்து பெரிய தாயார் போல இருந்ததை நாம் என்றுமே மறக்கமுடியாது.

அம்மாவின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்போம்.

- Hatton ரவி குடும்பம்
(மகாஜனாவின் 1971 உதைபந்தாட்டச் சாம்பியன் குழுவின் கப்டன்)

### Kunchu Aachchi

I didn't have any grand parents, not even seen them in pictures until I was 15 years old. You were the only grandma I had.

I always had the pleasure speaking to you. The good lovely stories you always tell me about my Ammamma is unforgettable.

I can't believe that you won't be with us for Christmas, though we won't have your presence, you will always be with us in our heart.

You lived a high life with love from your grand children daughters, and sons. You will be dearly missed, specially the chocolate biscuits you gives me and my Acca Nivi.

***Kayanthini***
***& Nivi Kandasamy***

படிப்பகம்

www.padippakam.com

# Loving Ammamma

After coming to England I was shortly reunited with my grandmother, a woman who took care of me my whole life. So when she was diagnosed with dementia, it scared me. It made me upset that I was praying to god to help her, to save her. During my period of realisation of my grandmother's health, my uncle shared with me some past facts about my Ammama.

Many years ago when she was living in Sri Lanka, she was diagnosed with cancer. In that day and age, in a developing country, fuelled by war and poverty, where medicine and technology was so mediocre compared to today. Many would have thought it was hopeless to survive cancer. But my Ammama, with the help of radiotherapy, she survived it; she lived. Because she had hope, her children had hope.

The morale of what I had learnt was that my grand mother was not a quitter, she was a fighter. She fought the cancer as if it was a tyrant, which needed to be destroyed. And in doing so she lived to see her grand children being born. I was unlucky, to have had three of my grandparents pass away before I had learned to walk. But I was lucky in the sense that I had one left who was with me and played a part in shaping my life. I cannot believe that she has gone. My heart aches and now there is an empty void, which only the memories I have of her can help heal it.

When my Ammama was born like everyone else I, it was her who was the one that was crying while everyone else around her was smiling. She lived a worthwhile life, surrounded by loved ones and friends in her final moments. Now we are here at the end, and this time she made sure that it was her who went away smiling, while everyone around her was left crying.

In closing I would now like to now read you a poem called Love and Death, More fruits of solitude.

படிப்பகம்

www.padippakam.com

They that love beyond the world
cannot be separated by it.
Death cannot kill what never dies.
Nor can spirits ever be divided, that love and live in the same divine principle,
the root and record of their friendship.
If absence be not death, neither is theirs.
Death is but crossing the world, as friends do the seas; they live in one another still.
For they must needs be present,
that love and live in that which is omnipresent.
In this divine glass they see face to face;
and their converse is free, as well as pure.
This is the comfort of friends,
that though they may be said to die,
yet their friendship and society are,
in the best sense,
ever present, because immortal.

**Thank you!**

**Karthikeyan Sritharan**

---

*Delivered at the Funeral Service*
*on 23 December 2007*

கங்காவின்,
சபேசனின்
அம்மாவின் இழப்பு
ஒரு சமுதாய
சிந்தனையுள்ள,
சமூகம் நல்ல வழியில்
நடக்க வேண்டும்
என்ற தீவிர
சிந்தனையுள்ள ஒரு
ஆத்மாவின்
மறைவாகும்

அம்மாவின் பணியை
தெளிந்த அறிவும்
தொலைநோக்கும்
கொண்ட கங்கா
அண்ணனும் தம்பி
சபேசனும் தொடர்ந்து
எடுத்துச்
செல்கின்றனர்.

தக்கார் தயவிலர்
என்பது அவர்தம்
எச்சத்தால்
காணப்படும் - குறள்

வைத்தியகலாநிதி
பகீரதன் அமிர்தலிங்கம்
மறைந்த தலைவர்
திரு அ அமிர்தலிங்கம்
குடும்பம் சார்பாக

படிப்பகம்

www.padippakam.com

# Selfless Grandma

The word Grandmother is defined as the mother of one of your parents, but to me there are many words that can describe my Grandma. She was Loving, Selfless, Funny, Caring, Mothering, Adoring, Happy, and the list goes on. That's why to put pen to paper and write something about Ammama is impossible because, there's too many things to say about her. She was simply a warrior of life, fighting through her pain and living her life to the max. These things which I say come from my heart and not from my mind, and I speak on behalf of those who understand what a grandmother means and who understand life's gifts, such as those that walk gracefully among us n the battle against life's forces of nature, the unsung heroes, just like my Grandma.

My grandmother is one of the greatest people to have ever reached out to me, and I will never be able to replace the void that now challenges me. I think it is at these moments that us young ones start to grow up, and mature into the responsible people that we need to be. I am 14 years old, and I have an older brother, my mother, my father and a very large family (as you can see today), but I only ever knew and really got to love one Grandparent. My only wish is that she has found peace, and is happy and roaming another world, side-by-side with my Grandfather, and that one day we will meet again.

**Until then, please watch over me, and keep me safe, watch as I grow,**
**and achieve and face the challenges of life.**
**Farewell Ammama.**
**With all my love,**

**You're ever loving grandson,**
**Reshikesan Sritharan**

---

*Delivered at the Funeral Service*
*on 23 December 2007*

படிப்பகம்

www.padippakam.com

# Dearest Kunchachi

Grandma or Kunchachi as she was known to me from my childhood, I always called her using the name Kunchachi. She was like my own grandmother, since I never had the chance to see my own father's mum. My father was like a son to her, which in turn made me her grandson.

I was about nine when I left sunny Sri Lanka, for the English wet weather, during those nine years, my fondest memories of Grandma were that she; occasionally used to take me with her to buy her favourite ginger biscuits from the near by shops. As well as this, every time my birthday arrived she would give me money so I could buy the toys I desired. She treated me like her own grandson, and never showed any differences between any of us, she loved us all, maybe some more than others, but her love was big enough even for the ones who may have received the least.

She showed me a lots love and care, kissed me on my cheeks on every birthday. In my opinion she lived a very happy life that most can only dream of living. She was 82 years old when she passed away, and lived a good and respectable life back in Sri Lanka and in England.

She will be greatly missed by me but I know she is up there looking down on me helping me face the world and fighting for my future.

With Love which only dreams are made of,

**Haarisan & Abitha Jegatheesan**

படிப்பகம்

www.padippakam.com

# அன்னை சிவகெங்கை இல்லம்

இளமையை இலட்சியங்களால் வரித்துக்கொண்ட அந்தக்காலம் எவ்வளவு இனிமையானது. சிறுவர்களாயிருந்து இளைஞர்களாக முகிழ்க்கும் அந்தக்காலத்தைப்பற்றிய உணர்வுகளையும் அனுபவங்களையும் இலக்கியங்கள் வாயிலாக படிக்கும்போது எமது அந்தக்காலம் போன்றதாக உணர்ந்திருக்கிறோம். ஆனாலும் சடுதியான சில சமபவங்களும் எம்மை அறியாமலே எம்மையும் அந்தக்காலத்திற்கு கொண்டுபோய்விடுகின்றது.

சபேசனின் அன்னை சிவகெங்கை மரணத்தின் துயரமும் எனது நினைவுகளை அந்தக்காலத்திற்கே இட்டுச்செல்கின்றது. மகாஜனாக்கல்லூரியின் பின்புலத்தால் கலை, இலக்கிய ஈடுபாடு, படைப்பாளிகளாக உருவாகியமை, 1980 ஆண்டில் 'புதுசு' கலை இலக்கிய சஞ்சிகை, அப்போது கூர்மையடைந்திருந்த இலங்கை தேசிய இனப்பிரச்சனை, 'புதுசு' சஞ்சிகையூடாக காங்கேசன்துறை சீமேந்து தொழிற்சாலையில் பொறியியலாளராக இருந்த மறைந்த தோழர் விசுவானந்ததேவனுடான அறிமுகம், பின்னர் தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி - தமிழீழ தேசிய விடுதலை முன்னணி அரசியல், இவற்றுக்கெல்லாம் மையம் வைத்தாற்போல் சபேசனின் வீடு, இப்படியாகத்தான் என்னால் அந்தக்காலத்தை நினைக்கக் கூடியதாகவுள்ளது.

சபேசனின் வீடும் அவனது உறவுகளும் இல்லாத அந்தக்காலத்தை நினைத்துப்பார்க்க முடியாதுள்ளது. எனக்கு சபேசனைத் தெரிந்த முப்பது வருடங்களில் இருபத்தெட்டு வருடங்களாவது சபேசனின் உறவுகளோடு நெருக்கமாக பழகி வருகின்றேன். எங்களை வெறுமனே பள்ளிக்கூடத்து பெடியங்களென கருதாமல் தனக்கேயுரிய பாணியில் புன்னகை ததும்ப வரவேற்று உபசரித்து, எங்களை அக்கறையுடன் விசாரித்து மணிக்கணக்காக அளவளாவும் சுபாவம் கொண்டவர் சிவகெங்கை அம்மையார். அந்த தாய்மை உள்ளத்தின் மரணம் சபேசன் குடும்பத்தினரை நன்கு தெரிந்த என்னைப்போன்ற எல்லோரையும் துயரத்தில் ஆழ்த்தியது.

அம்பனையில் தெல்லிப்பழை பண்டத்தரிப்பு பிரதான வீதிக்கு சமாந்திரமாக ஒரு புறத்தில் சிறிய வயல்வெளி, மறுபுறத்தில் மகாஜனாக்கல்லூரிக்கு அடுத்தாற்போல் மிகவும் நெருக்கமாக சபேசனின் வீடு. எப்போதுமே ஓவென்று திறந்திருக்கும் சபேசனின் வீட்டு விறாந்தையில் போடப்பட்டிருக்கும் நாற்காலிகளில் வயற்காற்றை சுவைத்தபடி, கொஞ்ச இலக்கியமும் மிகுதி இளமைக்கனவுகளாகவும் எத்தனை நாட்கள் அரட்டை அடித்திருப்போம். விறாந்தையின் பெருங்கதவுகளை அகலத்திறந்துவிட்டு, விறாந்தையையும் வீட்டின் பின்புறத்தையும் பிரிக்கும் அந்த ஓடையில் சில்லென்று வரும் வயற்காற்றை சுவாசித்தபடி பின் மதியவேளைகளில் எத்தனை பொழுதுகள் உறங்கியிருப்போம்.

படிப்பகம்

மகாஜனாக்கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவர்களாக இருந்துகொண்டே 1980 ஆண்டில் 'புதுசு' கலை இலக்கிய சஞ்சிகையை இளவாலை விஜயேந்திரன், அ.ரவி, சபேசன் ஆகியோருடன் சேர்ந்து வெளிக்கொணர்வதற்கு முன்பே சபேசன் எங்களுக்கு நன்கு அறிமுகமாயிருந்தான். 1977 ஆண்டு ஒக்ரோபர் மாதப்பகுதியில் பாடசாலை இடைவேளையொன்றின்போதே மகாஜனாக்கல்லூரி வளவினுள் எனக்கும் சபேசனுக்குமான முதற்சந்திப்பு நிகழ்ந்தாக நினைவிலுள்ளது. அப்போது நாங்கள் சிறுவர்களாக இருந்தபோதும் எங்களிடையே நிலவிய கலை இலக்கிய ஈடுபாடே எங்களது முதற்சந்திப்பை இன்னமும் எனக்கு ஞாபகப்படுத்துகின்றது. இவ்வாறே இளவாலை விஜயேந்திரன் மற்றும் அ.ரவி ஆகியோருக்கும் சபேசன் முன்னரே அறிமுகமாயிருந்தான்.

முதலில் நாங்கள் இலக்கிய சஞ்சிகைகள், கவிதைத்தொகுப்புகள், சிறுகதைத்தொகுப்புகள் மற்றும் நாவல்களை பரிமாறுபவர்களாகவும், அவற்றினைப்பற்றிய கருத்துக்களை பரிமாறுபவர்களாகவுமே இருந்தோம். பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக எழுத்துலகிலும் காலடி வைத்து 'புதுசு' கலை இலக்கிய சஞ்சிகையின் ஆசிரியர் குழுவானோம். பாடசாலை மாணவர்களாக இருந்துகொண்டு சஞ்சிகையொன்றினை அச்சில் வெளியிடுவதென்பது அந்தக்காலத்தில் சாதாரண விடயமல்ல. எங்கள் நால்வரிடையே இருந்த கடுமையான சம உழைப்பும் 'சபேசன் வீடு' என்ற உறுதியான தளமுமே ஆரம்பகால 'புதுசு' இதழ்களின் வெற்றி எனலாம். அக்காலகட்டத்தில் 'புதுசு' ஆசிரியர் குழுவின் கூட்டங்களும் சபேசன் இல்லத்திலே நிகழ்ந்தன.

அளவெட்டியென்ற பெருங்கிராமம் பிரதானமாக வடக்கெனவும் தெற்கெனவும் பிரிந்து கிடந்தது. தெல்லிப்பழை பண்டத்தரிப்பு வீதியையொட்டி அளவெட்டியின் வடக்கு எல்லையில் வாழ்ந்த மக்களுக்கு அளவெட்டியின் வடக்கு மத்தியபகுதி அல்லது தெற்கு பகுதியைவிட பன்னாலை, அம்பனை, தெல்லிப்பழை பகுதிகளுடனே அதிகளவிலான தொடர்புகளும் பிணைப்பும் இருந்தது. இவ்வாறே தெல்லிப்பழை பண்டத்தரிப்பு வீதியையொட்டி அளவெட்டியின் வடக்கு எல்லையில் வாழ்ந்த எனக்கும், இளவாலையின் தொடக்க முனையிலும் வாழ்ந்த இளவாலை விஜயேந்திரனுக்கும் அ.ரவிக்கும் 'புதுசு' தொடர்பான சந்திப்புகளுக்கும் பிற வேலைகளுக்கும் இளைப்பாறுவதற்கும் 'சபேசன் வீடு' என்பது கேந்திர முக்கியத்துவம் வாயந்ததாக மாறியது.

1977 ஆன்டு ஜே.ஆர். ஜெயவர்த்தனா அரசின் வருகையின் பின் கூர்மையடைந்து கொண்டிருந்த இலங்கை தேசிய இனப்பிரச்சனையும், எங்கள் நால்வரது கலை இலக்கிய சார்ந்த கூட்டு வேலைகளும் எங்களை இயல்பாகவே தமிழ் பேசும் மக்கள்பற்றியும், ஒட்டு மொத்தமான இலங்கை மக்களின சமூகப்புரட்சியைப்பற்றி சிந்திக்கவும் செயலாற்றவும் வைத்தது. கலை இலக்கியத்தில் மிகுந்த ஈடுபாடும் ஆர்வமும் கொண்டிருந்த மறைந்த தோழர் விசுவானந்ததேவன், 'புதுசு' கலை இலக்கிய சஞ்சிகையின் பின்னாலுள்ள மாணவர்களின் சக்தியைக்கண்டு எங்களை சந்திக்க விருப்பங்கொண்டார். 1980 ஆண்டின் பிற்பகுதியில் நாங்கள் அவரை முதன்முறையாக சந்தித்தோம். அப்போது

www.padippakam.com

தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி என்ற அமைப்பின் முன்னணி நபராகவே அவர் எங்களுடனான உறவுகளைப் பேணினார். சிறிது காலத்திலே சபேசன் வீடும் அவருக்கு நன்கு அறிமுகமாயிற்று.

தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியின் அரசியல் அறிக்கையை 'புதுசு' அச்சகத்தில் அச்சிடுவதில் எங்களை ஈடுபடுத்திய தோழர் விசுவானந்ததேவன், படிப்படியாக எங்களுடன் மிகவும் ஐக்கியமாகிவிட்டார். இந்தக் காலகட்டத்தில் தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணிக்குள் தோழர் விசுவானந்ததேவன் என்ற இயங்குசக்தியால் வேறு பலரும் உள்வாங்கப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் படைப்பு இலக்கியவாதிகள் என்பவர்கள் புத்தகப்பூச்சிகள், சோம்பேறிகள், நம்பகத்தன்மையற்றவர்கள், குட்டி பூர்சுவாக்கள் என்ற வரட்டு எண்ணங்கொண்டவர்களாக இருந்தனர். இதனால் அப்போதைய தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியின் பின்னாலிருந்த மார்க்சிய லெனிசக்கட்சியின் வரலாற்றினை ஆழமாக அறியாதவர்களாகவும் 'புதுசு' முழுவினர் இருந்தார்கள்.

இந்தப் புதியவர்களை முற்றுமுழுதாக நம்பியே தோழர் விசுவானந்ததேவன் 1983 ஆண்டில் தமிழீழ தேசிய விடுதலை முன்னணியினை உருவாக்கினார். தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியென்பது தமிழீழ தேசிய விடுதலை முன்னணியாக உருவெடுத்த பின்னர், சபேசன் வீடு தமிழீழ தேசிய விடுதலை முன்னணி அமைப்பின் யாழ் குடாநாட்டின் முக்கிய சந்திப்புக்களமாக மாறியது.

1983 ஆண்டு யூலைக்கலவரங்களின் பின் ஆயுதப்போராட்ட வெறி கொண்டு வீக்கமடையாத அமைப்புகளில் தமிழீழ தேசிய விடுதலை முன்னணியை குறிப்பிட்டுச் சொல்லலாம். எனினும் தமிழ் குறுந்தேசியவாதிகளின் தமிழீழக் கத்தலைக்கண்டு மிரண்டு, தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியிலிருந்து திடீர்ப்பாய்ச்சலாக தமிழீழ தேசிய விடுதலை முன்னணியை உருவாக்கியதே, தமிழீழ தேசிய விடுதலை முன்னணியின் உடனடியான முற்றுமுழுதான அஸ்தமனத்திற்கான காரணம் என்பதைக் குறிப்பிடாமலும் விடமுடியாது.

18 வருடங்களின் பின்னர், 2002 ஆண்டு கோடைவிடுமுறையில் யாழ்ப்பாணத்திற்கு சென்றிருந்தேன். அப்போது எனது கிராமம், அளவெட்டியைப் பார்க்கவேண்டுமென்று எனக்கிருந்த ஆர்வத்தைப்போலவே, நான் கல்வி பயின்ற மகாஜனாக்கல்லூரியையும் அதன் சூழல்களையும், குறிப்பாக சபேசனின் வீட்டையும் பார்க்கவேண்டுமென்ற ஆர்வமும் எனக்கிருந்தது. மகாஜனாக்கல்லூரியைப் பார்க்கச் செல்வதற்கு முன்னரே தெல்லிப்பழையிலிருந்து மகாஜனாக்கல்லூரிவரையிலான அந்த பிரதான வீதி மூடப்பட்டிருப்பது எனக்குத் தெரிந்திருந்தது. எனினும் மகாஜனாக்கல்லூரியை பார்க்க முடியுமானால் மகாஜனாக்கல்லூரியிலிருந்து கண்ணுக்கெட்டும் தூரத்திலுள்ள சபேசனின் வீட்டையும் பார்க்கலாமென நம்பினேன். ஆனால் என்னைவிட உயரமாக வளர்ந்திருந்த அந்த பற்றைகள் மகாஜனாக்கல்லூரியின் கிழக்குப்பக்க வாசலிருந்து கண்ணுக்கெட்டும் தூரத்திலிருந்த சபேசனின் வீட்டை

படிப்பகம்

www.padippakam.com

முற்றுமுழுதாக மறைத்திருந்தது. மகாஜனாக்கல்லூரிவரை சென்றிருந்தும் சபேசனின் வீட்டைப் பார்க்க முடியாதது எனக்கு மிகவும் ஏமாற்றமாகவே இருந்தது.

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இலங்கையில் நிலவிவரும் போர்ச்சூழல், இலங்கையில் வாழும் எல்லா இன மக்களும் காலங்காலமாக வாழ்ந்த சொந்த இடங்களைவிட்டு இடம்பெயர்வதற்கான காரணங்களை தோற்றுவித்தன. இந்த இடப்பெயர்வு இலங்கையினுள்ளும் மாத்திரம் நிகழவில்லை. பல இலட்சக்கணக்கானவாகள் இலங்கையைவிட்டும் வெளியேறினர். இவ்வாறு இலங்கையிலிருந்து வேறு நாடுகளுக்கு இடம்பெயர்ந்தவர்கள் இன்று பலதரப்பட்ட சூழ்நிலைகளில் வாழ்ந்து வருகின்றார்கள். அவரவர்கள் தத்தமது நாடுகளில் இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்துவந்த பல மனிதர்களை சந்திக்கின்றார்கள், உறவாடுகின்றார்கள். ஆனால் இலங்கையிலிருந்து இடம்யெர்ந்து தமது கிராமத்தைச்சேர்ந்த அல்லது தமது அயற்கிராமத்தைச்சேர்ந்த அல்லது தம்முடன் அந்தக்காலத்தில் ஒன்றாகப்படித்த ஒருவனைச் சந்திக்கும்போது பூரித்துப்போகின்றார்கள். இப்படித்தான் இங்கிலாந்தில் வாழும் சபேசனது அந்தக்கால உறவு நெதர்லாந்தில் வாழும் என்னுடன் இன்னமும் தொடர்கின்றது.

சபேசனுக்கு ஒரு வீடு இருந்ததுபோலவே எங்கள் எல்லோருக்குமே வீடுகள் இருந்தன. ஆனால் சபேசனின் வீட்டில் எல்லோருமாக சந்திக்கும்போதே நாங்கள் உற்சாகமுடையவர்களாவும் சுதந்திரமாக கருத்துப்பரிமாறுபவர்களாகவும் இருந்தோம். 'புதுசு' உருவாக்கத்திலிருந்து தமிழீழ தேசிய விடுதலை முன்னணியின் அஸ்தமனம்வரை, சபேசன் வீட்டுச் சுதந்திரக்காற்றினை சுவாசித்தவர்கள், மறைந்த சிவகெங்கை அம்மையாருக்கே நன்றி சொல்ல வேண்டும். சபேசனுக்கு சபேசனின் நண்பர்கள், தோழர்கள் இருந்தது போலவே சபேசனின் சகோதர சகோதரிகளுக்கும் நண்பர்களும் தோழர்களும் இருந்தார்கள். அவர்களும் சிவகெங்கை அம்மையாரின் வீட்டுச் சுதந்திரக்காற்றினை சுவாசித்ததாகவே கூறுகின்றார்கள்.

அன்னை சிவகெங்கை இல்லத்தின் தனித்துவத்துவம் வாய்ந்த வரலாறே அன்னாரினதும் வரலாறாகும்.

பாலசூரியன்
நெதர்லாந்து
ஜனவரி, 2008

படிப்பகம்

# எழுதவும், நினைக்கவும், நெகிழவும் ஆயிரமாயிரம் விசயங்கள் உள்ளன.

*15.'.12.'.2007 சனி இரவு 10 மணி*

சபேசனின் அம்மா, பெரியக்காவின் அம்மா, பாப்பாக்காவின் அம்மா என்பவற்றிக்கும் அப்பால் எங்களுடைய இன்னொரு அம்மாவாகவும் நாங்கள் நினைத்திருந்தோம். 1980இலிருந்து 1990 வரை கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் அம்மாவை நாங்கள் கண்டோம், கதைத்தோம், ஏச்சு வாங்கினோம், நக்கல் வாங்கினோம்.

என்னைப்பற்றி என் அம்மா தன் வேதனைகளைச் சொல்ல இந்த அம்மாவின் திண்ணையையும் பாவித்தா. அப்படி இருந்தது உறவு. ஒவ்வொரு நாளும் பின்னேரம் ஒரு பிளேன்ரீ குடிப்பதற்கு இந்த அம்மாவின் வீடுதான் எங்களின் வீடாக இருந்தது. எங்கள் பிரச்சனை எது கதைப்பதற்கும் இந்த வீடு ஒன்றே உரிய வீடாக இருந்தது. அம்மா தன் தலைவனின் திவசம் செய்வதற்கு ஒவ்வொரு வருசமும் தன் குசினிக்குள் எனக்கும், விசி(கவிஞர் இளவாலை விஜயேந்திரன்)க்கும், பாலா (பாலசூரியன)வுக்கும் ஐந்தாறு கறிகளுடன் சோறு தந்தார். முடியப் பாயாசம் குடித்தோம்.

நாங்கள் புதுசு சஞ்சிகையை தொடர்பாகவும், அரசியல் தொடர்பாகவும், சும்மா கதைப்பதற்கும் அம்மாவின் இருப்பிடமே பயன்பட்டது. அம்மாவின் மனதும் அதற்கு இடங்கொடுத்தது.சொல்லவும், எழுதவும், நினைக்கவும், நெகிழவும் ஆயிரமாயிரம் விசயங்கள் உள்ளன.

இடையிடை தோடம்பழ கேக்கும், போண்டாவும், அடிக்கடி வடையும், சுண்டலும் என்று, எங்கள் பின்னேர தேத்தண்ணி அம்மாவின் வீட்டில் அமைந்தது. எங்கள் அரசியலின் இரகசியத் திட்டங்கள் கூட அம்மாவுக்கு பரகசியமாய் இருந்தது. இன்னும் சொல்ல என்னென்னவோ ஏராளம் ஆயிரம் உண்டு.

என்னவோ அம்மா, இப்படி எழுதுவது எனக்கு மிகுந்த திருப்தியாக உள்ளது. எப்படி நான் என் அன்பைத் தெரிவிப்பேன் என்று இருந்தேன். அம்மா, உங்களுக்கு என் அன்பும் வணக்கமும்.

அ இரவி

www.padippakam.com

# Acca Sivakengai Nagalingam – A Tribute

Me and my wife were in Trichy, south India from 22 November on a holiday. Before we left France on 21st , we heard that my cousin sister **Sivakengai** was badly ill at the Lewisham Hospital. On 13 December we received an information that she had passed away by 2.30 pm.

**Mrs Sivakengai** was the only child born to Mr Periyathamby Murugesu and wife Annappillai of Ampanai Tellippalai on 12 July 1926. Her father was an elder brother of my father. We used to call him '**Car Appa'** and aunty as '**Car Aachy'**. Both loved us very much and helped us in many ways.

We were in Malaysia with our parents and during our childhood, we underwent lot of difficulties due to the second world war. Hence my parents sent me and three of my elder brothers out of ten children in the family to Srilanka in 1950. We stayed at Mallakam with our uncles and attended Mahajana College. After the three elder brothers completed their education and left Mahajana, I had to continue my education, and hence **'Car Appa' and 'Car Aachy' were so gracious enough to keep me with them for more than three years until I completed my education and left Mahajana in 1957** and worked in an Asbestos Company and later got employed as a surveyor in the Geological Dept in 1961 and after about 20 years service due to ethnical disturbances in Srilanka, left for Jordan, worked there for a few years and migrated to France and living there as a political refugee with my wife since then.

Sivakengai acca was educated at Mahajana College for a brief period. She got married to Mr Nagalingam an employee of the Cement Factory at KKS during the early fifties and has five children – three boys and two girls – who are all now well settled in the United Kingdom. After the demise of **Aththan Nagalingam** in 1976, it was the responsibility of **Sivakengai Acca** to look after the children, educate them and finally give them in marriage. As all the five children are in the UK, Acca also migrated to the UK in 1997 and since had been happly living with the children.

**We pray for her soul to rest in peace**

**K Rajadurai**
**Trappes, France**

படிப்பகம்

www.padippakam.com

# நிறைவாழ்வு பெற்ற திருமதி சிவகெங்கை நாகலிங்கம்

திருமதி சிவகெங்கை நாகலிங்கம் அவர்களின் மறைவுச்செய்தி எனக்குப் பேரதிர்ச்சியை கொடுத்தது. அன்னாருக்கு நேரில் இறுதி மரியாதை செலுத்தமுடியாமற் போனமை துன்பத்தினை மேலும் பன்மடங்காக்கியது. அமரர்களான திரு. நாகலிங்கம், திருமதி சிவகெங்கை நாகலிங்கம் அவர்களின் அறிமுகம் அவர்களின் மூத்த புதல்வன் நண்பன் திரு.நா.ஸ்ரீகெங்காதரன் மூலமாகவே ஆரம்பமானது. அறுபதுகளின் ஆரம்பத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் கல்வி பயின்ற வேளை திரு.ஸ்ரீகெங்காதரன் அவர்களின் குடும்பத்துடனான எனது தொடர்பு இறுக்கமடைந்தது. அமரர் திரு.நாகலிங்கம் அவர்களின் முற்போக்கு அரசியல் சிந்தனையும் தொழிற்சங்க நடவடிக்கைகளும் சிறுவயதில் இருந்தே என்னை வெகுவாக கவர்ந்தது. அமரர்களான திரு.நாகலிங்கம், சிவகெங்கை தம்பதியினர் மாணவப் பராயத்திலிருந்தே அரசியலில் அதிதீவிர ஈடுபாடு கொண்டிருந்த புதல்வன் திரு.ஸ்ரீகெங்காதரன் அவர்களுக்கு மிக ஊக்கம் கொடுத்தனர்.

அமரர் திருமதி. சிவகெங்கை நாகலிங்கம் அவர்களின் விருந்தோம்பும் பண்பு அவர்களில் விசேடமாக காணப்பட்ட சிறப்பம்சமாகும். பெற்றோர் போன்றே பிள்ளைகளும் இப்பண்பினை பேணி கடைப்பிடித்து வருகின்றனர். பாடசாலையில் கல்வி பயின்ற காலத்தில் திருமதி சிவகெங்கை நாகலிங்கம் அவர்கள் என்னையும் அன்னாரின் பிள்ளைகளில் ஒருவராக மதித்து எனக்கு உணவு பரிமாறிய சம்பவங்கள் என்மனதில் நன்றியுணர்வோடு நிழலாடும் நினைவுகளாகும்.

மாறுபட்ட சூழ்நிலைகளால் தமிழ்மக்கள் புலம்பெயர்ந்து வாழும் நிலை. பிள்ளைகள் பெற்றோரையும், பெற்றோர் பிள்ளைகளையும் பிரிந்து வாழும் நிலையில் வயதானபெற்றோர் பிள்ளைகளின் அன்பிற்கும் அரவணைப்பிற்கும் ஏங்கி நிற்கின்றனர். வயோதிபர் இல்லங்களிலும் நலன்புரி நிலையங்களிலும் வாழும் வயோதிபப் பெற்றோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துவரும் இன்றைய காலகட்டத்தில் சுகவீனமுற்றிருந்த அமரர் திருமதி.சிவகெங்கை நாகலிங்கம் அவர்கள் தகுந்த வைத்தியப் பராமரிப்புக்களுடன் தனத ஐந்து பிள்ளைகளினுடைய அரவணைப்பு, ஆதரவுடனும் இயற்கை எய்தியமை அவர் செய்த நற்பயனே ஆகும். பூரணத்துவம் பெற்ற, நிறைவாழ்வு வாழ்ந்த திருமதி. சிவகெங்கை நாகலிங்கம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

சாந்தி சாந்தி சாந்தி

**மனோ. சிறீதரன்**
தொழில் நீதிமன்ற நீதிபதி
மேலதிக நீதவான் கொழும்பு.

படிப்பகம்

www.padippakam.com

# அன்பின் மகத்துவத்தை உணர்த்திய அம்மா

மிகவும் கனத்த இதயத்துடன்தான் இந்த இரங்கல் உரையை நிகழ்த்துகிறேன். இன்று மரணம் என்பது சர்வசாதாரணமாகவும் , தினமும் நூற்றுக் கணக்கானவர்கள் மரணத்தைத் தழுவிக் கொண்டிருக்கும் காலச் சூழலில் இயற்கை மரணத்தை எய்திய இந்தத் தாயின் இறுதிச் சடங்கில் இவ்வளவு பெரும் திரளான அளவில் நாம் எம்மை ஏன் இணைத்துக் கொண்டுள்ளோம்? என்ற கேள்வி எம் முன்னால் எழுகிறது.

மிகவும் சாதாரண குடும்பத் தலைவியாக, எல்லோரையும் போலவே பொதுவான ஆர்ப்பாட்டமில்லாத வாழ்க்கையை நடத்திய இந்தத் தாய் எந்த விதத்தில் சிறப்பு மிக்கவர் என்ற கேள்வியும் எழுவது இயல்பே.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் பணி புரிந்த ஓர் தொழிலாளி, தொழிற்சங்கவாதி, அரசியல் செயற்பாட்டாளர் நாகலிங்கம் அவர்களுக்கு வாழ்க்கைப்பட்ட சிவகெங்கை என்ற இந்த அம்மாவின் வாழ்வு ஓர் எடுத்துக்காட்டு என்பதையே குறிப்பிட விரும்புகிறேன்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கு மிக அருகில் இவரது வீடும் அமைந்ததால் பலரும் அங்கு தங்கிச் செல்லும் இடமாக அந்த இல்லம் அமைந்தது. நாட்டிலும், உலகெங்கிலும் பல உன்னதமான இடங்களில் இருக்கும் பலர் இந்த வீட்டின் படிகளை மிதிக்காதவர்களாக இருந்திருக்க முடியாது. இலங்கைத் திருநாட்டில் அரசியல் வரலாறு படைந்த தோழர். வ. பொன்னம்பலம், தோழர். எட்மன்ட் சமரக்கொடி, டாக்டர். எஸ். ஏ. விக்கிரமசிங்கா, செனட்டர் நாகலிங்கம், வாசுதேவ நாணயக்கார போன்ற பலர் இந்தத் தாயின் உபசரிப்பைப் பெற்ற சிலராகும். மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர் பலர் இந்தத் தாயிடம் உணவு அருந்தாமல் சென்றிருக்க முடியாது. தேநீர் அருந்தாமல் சென்றிருக்க முடியாது. குறைந்த பட்சம் அந்த விறாந்தையில் அடுக்கடுக்காக காணப்பட்ட பத்திரிகைகளை, சஞ்சிகைகளை சற்று திறந்து பாராமல் சென்றிருக்க முடியாது.

அதிகாலை முதல் நடுநிசிக்கு அப்பால் வரை அந்த வீட்டு விறாந்தையில் யாரோ ஒரு விருந்தினர் நிச்சயம் இருப்பார். அல்லது அரசியல், இலக்கியம், நாடகம், விளையாட்டு என பல்வேறு தலைப்பிலே ஏதோ ஒரு விவாதம் நடக்கும். இதனால் அந்த குடும்பம் வீட்டில் தனிமையை அனுபவிப்பது என்பது மிகவும் அருமை. இதனால் அந்தக் குடும்ப வாழ்வு என்பது திறந்த புத்தகமாகவே இருந்தது.

வீட்டின் முன்னால் மிக நீண்ட, நெடிய வயல் பரப்பும், அவ் வீட்டின் பின்னால் பலா, மாமரம் என கனிகள் தரும்

படிப்பகம்

மரங்களும் ஓர் இதமான காற்றோட்டத்தை அகலத் திறந்த கதவுகளினூடாக அள்ளித் தரும். இந்த இனிய காற்று எவ்வாறு தங்கு தடையின்றி அந்த வீட்டிற்குள் சென்றதோ அதோ போன்று சாதி என்ற வெறி மிகவும் இறுக்கமாக தாண்டவமாடிய அக் காலகட்டத்தில், அத்துடன் தெல்லிப்பழை, பன்னாலை, கருகம்பனை, கொல்லங்கலட்டி, மாவிட்டபுரம் போன்ற பகுதிகள் சாதி என்ற கொடிய கட்டுப்பாட்டின் இருப்பிடங்களாக காணப்பட்டபோது இந்த வீட்டின் சகல கதவுகளும் அந்த மெல்லிய காற்றிற்கு திறந்தது போலவே அகலத் திறந்திருந்தன.

மிகவும் சந்தடி மிக்க அந்த வீட்டின் குடும்பத் தலைவியாக இந்த அம்மாவின் வாழ்வும் அந்தச் சூழலுக்கூடாகவே வளர்ந்தது. எம்மில் பலர் பல வீடுகளுக்குச் சென்றிருக்கிறோம். விருந்துகளில் பங்குபற்றியுள்ளோம். ஆனால் இவற்றில் எதனை நாம் இன்று வரை ஞாபகத்தில் வைத்திருக்கிறோம்? ஏன் எம்மால் ஞாபகத்தில் வைத்திருக்க முடியவில்லை? இங்குதான் இந்தத் தாய் மிக உயர்ந்த இடத்தில் இருக்கிறார். எந்தவிதமான முன்பின் அறிமுகமில்லாத பலர் பிள்ளைகளின் நண்பர்கள், நண்பிகள் என்ற பெயரில் அந்த வீட்டிற்குச் சென்றார்கள். அவர்கள் திரும்பி வரும்போது ஓர் கருணைகொண்ட தாயின் உபசரிப்பை பெற்ற மனநிறைவை மிக நெருக்கமாகவே பெற்றார்கள். உணர்ந்தார்கள்.

மனித நேயம் என்பதே இந்தத் தாயில் காணப்பட்ட மிகப் பெரிய பலமாகும். அன்றைய இளைஞர்கள் மட்டுமல்ல, இன்றைய இளைஞர்களும் இந்தத் தாயின் அன்பை அதன் மகத்துவத்தை ஓரே மாதிரியாகவே கணித்திருப்பதே அதன் சாட்சியாகும்.

இந்த இனிய, பெருமை மிக்க தாயின் சிறப்பைப் புகழ்ந்து ஓர் எழுத்தாளன் குறிப்பிடுகையில்,

“எமக்கு மட்டும் அவர் உதவியவர் அல்ல. அடிக்கடி ராணுவத் தாக்குதலுக்கு உள்ளாகி சுற்று வட்டாரமே அகதியாகும்போதும் அவர்களின் ஒரு பகுதியினரின் தங்குமிடமாக இவர்கள் வீடு இருந்தது. எனது குடும்பம் அகதியாகும்போது இந்தத் தாயிடம்தான் ஓடி வந்தோம்.”

இவ்வாறு குறிப்பிட்ட அந்த எழுத்தாளன்

“சுயநலம் கொண்ட எமது சமூக சிந்தனை முறையிலிருந்து விடுபட மனதளவில் இதற்கு நிறையவே தியாகம் செய்ய வேண்டும். இதற்கு இந்தத் தாய் , இந்தப் பெண், இந்த மனிதர் இந்த சமூகத்தின் தம்மளவில் எடுத்துக் காட்டாக இருந்தார் எனக் குறிப்பிட்டு சுயநலமே சமூக அமைப்பாகிவிட்ட எல்லைக்குள் மனிதனாக வாழ்தல் என்பதும் எடுத்துக்காட்டுத்தான்” என தனது இரங்கலுரையில் முடித்திருக்கிறான்.

இந்த இரங்கலுரையை எழுதிக்கொண்டிருந்தபோது எனது எண்ணங்கள் சுமார் நாற்பது ஆண்டுகளை நோக்கி

www.padippakam.com

பின்னே சென்றது. எனது இனிய தோழர். சிறீகெங்காதரனுடன் ஏற்படுத்திய நட்பின் ஆரம்ப நாட்களை எண்ணிப் பார்க்கிறேன். அவர்களின் வீட்டிற்குத் தினமும் செல்வேன். தனது பிள்ளைகளில் ஒருவனாக என்னை நேசிப்பதை, நேசித்ததை இன்றும் நான் உணர்கிறேன்.

இந்த நாட்டிற்கு வந்த பின்னர் அவரை நான் சந்தித்த போதெல்லாம் என்னைக் கண்டதுமே விழிகள் அகலத் திறந்து, தனது மனதின் சுமைகளை இறக்கும் அந்த ஆவலை பலமுறை நான் அவதானித்தேன். இந்த அம்மாவின் விலை மதிப்பற்ற நேசத்தை, இந்தக் குடும்பத்தின் பிரிக்க முடியாத உறவை நான் பெற்றிருப்பது அளப்பரிய பெருமிதத்தைத் தருகிறது.

மகாஜனக் கல்லூரியை தமது ஆலயமாகப் போற்றி அதனை வளர்த்தெடுக்க முன்னின்று உழைக்கும் பணியில் இக் குடும்பத்தைச் சார்ந்த பலரும் ஈடுபட்டுள்ளார்கள். தாம் உண்டு, தமது குடும்பம் உண்டு என எண்ணி வாழும் இந் நாளில் அப் பாடசாலையை நேசிக்கும் ஓர் குடும்பத்தை உருவாக்கிய பணி இந்தத் தாயையே சேரும்.

நாகலிங்கம் சிவகெங்கை என்ற இந்தப் பாசமிக்க தாயை நேசித்த பல இதயங்களில் நானும் ஒருவன் என்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். மகாஜனக் கல்லூரியின் இணையத்தளம் ஒன்றிலே அக் கல்லூரியின் பழைய மாணவன் ஒருவன் இவ்வாறு குறிப்பிடுகிறான்.

**"எல்லாரையும் போலவே சபேசனுக்கும் ஒரு அம்மா இருந்தார். ஆனால் எனக்கும் அவர் அம்மாவாக இருந்தார்."** என மனம் மிக நெகிழும் வகையில் எழுதியிருந்தான்.

மிக நீண்ட மறக்க முடியாத நினைவுகளை எனது இதயங்களிலே பதித்து தாய் அன்பு என்பதன் மகத்துவத்தை, அர்த்தத்தை, மனித நேயத்தை உணர்த்தி எம்மிடமிருந்து பிரிந்துவிட்ட அன்புத் தாயார் நாகலிங்கம் சிவகெங்கை அவர்களின் இனிய நினைவுகளை இந்த இறுதி நேரத்தில் நினைவு கூர்வது மனதிற்குப் பெரும் ஆறுதலைத் தருகிறது.

*(23.12.2007 அன்று நிகழ்த்திய இரங்கலுரை)*

***வி சிவலிங்கம்***

படிப்பகம்

www.padippakam.com

## என்றும் நன்றிக்குரிய மருத்துவத் துறையினர்....

**எ**ங்களின் தாயார் 1981 இல் புற்று நோய்க்கு ஆளானபோது அவரைத் தனது தாயாராக நினைத்து வைத்தியம் செய்வித்த எங்கள் குடும்ப நண்பர் **திரு பொ தர்மகுலசிங்கம்** அவர்களையும் (Captain of the Mahajana Soccer team which won the All Island Championship in 1970)

**தா**யாரின் வதிவிடம் தூரமாக இருந்தபோதிலும் தன்னைக் குடும்ப வைத்தியராக்கி சிரத்தையுடன் வைத்தியம் பார்த்த எமது குடும்ப நண்பர் **வைத்திய கலாநிதி சு திருக்கணேசன்** அவர்களையும்

**லூ**யிசம்(Lewisham) மருத்துவப் பகுதிக்குள் வைத்தியம் பார்ப்பதற்கான தேவை கடைசிக் காலத்தில் ஏற்பட்ட வேளையில் குடும்ப வைத்தியராகிய **வைத்திய கலாநிதி எஸ் கந்தவேள்** அவர்களையும்

**மி**குந்த சிரத்தையுடன் அம்மாவைக் கவனித்த

**லூ**யிசம்(Lewisham) - மருத்துவப் பல்கலைக்கழக வைத்தியசாலையினரையும்

**சி**ட்கப் (Sidcup) குயின்ஸ் மேரி வைத்தியசாலையினரையும்

நன்றியுடன் நினைத்துப் பார்க்கின்றோம்

## நன்றிக்கு வார்த்தைகள் இல்லை

அம்மாவின் பிள்ளைகளான நாங்கள் எல்லோரும் எமது மண்ணைவிட்டு வெளியேறியபோது ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக அவரைத் தனது தாயாராகக் கவனித்த எங்கள் அன்புக்குரிய சகோதரி **சறோஜினி,** அவர் கணவர் **அத்தான் கந்தசாமி,** பிள்ளைகள் **நிவி, கஜந்தி** அகியோருக்கும் இவர்களுடன் இணைந்து உதவிய சகோதரி **மங்களக்கா,** அவர் **குடும்பத்திற்கும்**

௨00ԿஇVல் மீண்டும் இலங்கையில் பத்து மாதங்கள் நின்ற வேளையில் உரியவகையில் கவனித்த மைத்துனி **தவநாயகி ராசரத்தினம், பிள்ளைகள்** ஆகியோருக்கும் இவர்களுடன் இணைந்து உதவிய எங்கள் அன்புச் சகோதரிகள் தவமணி, **தயாளமணி, தங்கமணி, பெரியாச்சி சின்னம்மா சபாபதி** ஆகியோருக்கும் எங்கள் அன்பும் நன்றிகளும் என்றும் உரியது.

**குடும்பத்தினர்** 13 December 2008

***7, Blackfen Road, Sidcup, Kent DA15 8QD Tel: 0208 698 2938 E-mail: Genga_s@hotmail.com***

படிப்பகம்

www.padippakam.com

## நன்றிகள்...

எங்கள் அம்மாவின் மரணச்செய்தி கேட்டு உடன் வீடுவந்து ஆறுதல் சொன்னதுடன் உதவிகரம் நீட்டிய நண்பர்கள், பொது அமைப்பினைச் சேர்ந்தவர்கள், உறவினர்கள்

லண்டன் மகாஜனக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் நண்பர்கள்

மகாஜனக் கல்லூரியின் இலங்கை மற்றும் வெளிநாட்டு பழைய மாணவர் சங்கங்கள்

லூயிசம் சிவன் கோவில், சைவ முன்னேற்றச் சங்கம், தமிழ்ப் பாடசாலை விளையாட்டுச் சங்கம்

அரசியல், கலை, இலக்கிய நண்பர்கள்

இலங்கையின் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள்

வெளிநாடுகளிலிருந்து வந்து இறுதிமரியாதை செலுத்திய நண்பர்கள் உறவினர்கள்

அனுதாபச்செய்திகள், கட்டுரைகள் அனுப்பிய நண்பர்கள் உறவினர்கள்

மலர் வளையங்கள், மாலைகள் வைத்து மரியாவை செலுத்திய நிறுவனங்கள், நண்பர்கள்

மரணச் செய்திகளையும் கட்டுரைகளையும் வெளியிட்ட இணையத் தளங்கள் வானொலிகள், பத்திரிகைகள்

அனுதாபம் தெரிவித்ததுடன் உதவிய லூயிசம் பகுதியின் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள்

இறுதிச் சடங்கில் உதவியவர்களுக்கும் கலந்து கொண்டவர்களுக்கும்

ஜே ஆர் பிரிண்டேர்ஸ், Setline data ltd

குடும்பத்தினர்

படிப்பகம்

www.padippakam.com

# 12-07-1926 Mrs Sivakengai Nagalingam 13-12-2007

**Place:** Tellippalai, Sri Lanka
**Father:** Periyathamby Murugesu (Late)
**Mother:** Mathar Annappillai (Late)
**Husband:** Kanthappillai Nagalingam (Late)
**Father in Law:** Suppiah Kanthappillai(Late)
**Mother in Law:** Vallippilai Kanthappillai(Late)
**Brother in law:** Kanthappillai Sabapathy (Late)
**Children:** SriGengatharan
SribalaGengatharan
SriGengathevy Sritharan
SribalaGengathevy Rajaratnam
SriSabesan

**Daughter –in – Laws:**
Jeyagowry SriGengatharan
Tharani SribalaGengatharn
Malarvilli Srisabesan

**Son – in – Laws:** Karthigesu Sritharan
Subramaniam Rajaratnam

**Grand Children:** Janagan SriGengatharan
Karthikeyan Sritharan
Reshikesan Sritham
Ponni Srisabesan
Parithi Srisabesan

**Nieces:**
Thavamany Kanthasamy
Thayalamani Kanthasamy
Thangamani Selvarajah

**Cousins:**
Sinnamma Krishnar
Sellamma Sabapathy
Sabapathy Sinnathurai
Thankapponnu Sinnathamby
Sornam Sinnathurai
Sinnathamby Apputhurai
Ponnamma Ponnaiah
Sinnathamby Ponnuthurai
Sinnathamby Ponnurajah
Krishnar Kulasingham
Krishnar Kunasingam
Krishnar Pushpalingam (L)
Krishnar Sambasivamoorthy (L)
Krishnar Navaratnarajah (L)
Selvarani Thirugnanasambanthar
Parameswary Kailasapillai
Meenadchipillai Kanthasamy
Rajeswary Loganathan
Chinniah Thavarajah
Thavamany Arulpragasam
Suventhiram Thalayasingam
Sornam Nallainayagam
Ponniah Gunaratnam
Raththinam Anthonipillai
Sellam Appukkuddy
Thankam Thamboo

படிப்பகம்

www.padippakam.com

# அம்மா

குளிர் கொல்ல உனதுடலை
சாக்குக் கொண்டு மூடுவாய் அம்மா
போர்வை போர்த்தி நான் பார்த்ததில்லை

தைப்பூசம் புதிர் கூட்ட
வயல் வெளிக்கு வருவேன்
உன்னுடன்
பச்சையும் மஞ்சளும்
கதிர் கனத்துச் சிரிக்கும்
எந்தப் பீவெள்ளம்
உன் பசி தாகம் தணிக்குதோ
என் அடுத்த பிறவி
அந்த வெள்ளத்திற்காகுக!

அம்மா
நிலம் தேய முலை உரசி
புண் வந்த ஆடு
இறந்து போனதோ!
நீயும் இறந்து போன
செய்தி வரும் விரைந்து

நாளை காலை
மறு நாள் காலை
விரைவாய் யாரும் எழுதுவர்
அல்லது எழுதார்

அம்மா இறந்த சேதி யாரேனும் எழுதுக
நான் நின்மதியை விரும்புகிறேன்

சுகன்

படிப்பகம்

www.padippakam.com

# மனித வடிவில் தெய்வம்

மனித வடிவில் தெய்வம் வந்து
இனிது குடும்பம் தன்னைக்காத்தது!
அம்மா என்றே அழைக்கப்பட்டது
அன்பால் குடும்ப விருட்சம் தன்னை
தியாக நீரால் செழிக்க வளர்த்தது.
ஆணி வேராய்க் குடும்ப விருட்சம்
தழைக்க நிலைத்துச் சேவைகள் செய்தது.
இல்லறம் விளங்க பல்லறம் புரிந்த
தெய்வம் எமையெல்லம் ஆளாக்கியபின்
பிறவிப்பயனாம் இறைபதம் அடையும்
ஆர்வம் கொண்டு இறைபதம் தொழுதது.
மனித வடிவில் வந்த தெய்வம்
எம்மைப்பிரிதல் இயற்கையே! என்றது.
வீடு பேறுற்றது எங்கள் நெஞ்சில்
நிலைத்ததே என்றும் நாம் மறவோம்!
நாள்தொரும் அஞ்சலி செலுத்தி அம்மா என
வழிபடவோமே வாழ்நாள் முழுவதும்!

புலவர் ம.பார்வதிநாதசிவம்.

படிப்பகம்